# சார்பு நீதிமன்றம், சீர்காழி.

SC.56/2023

பெயர் - ஜான்சன்தேவராயர் (PW1- Recall)

த/பெ. /க.பெ.

தேதி - 03.09.2024

A1, A3 to A7 present.

<u>சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்கு **விசாரணை**</u>

நீதிமன்றத்தில் முதல் விசாரணையில் சொல்லி உள்ள விபரங்களை தான் எனது புகார் மற்றும் போலிஸ் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். மருத்துவமனையில் காயம் பட்ட விபரங்களை மருத்துவரிடம் நான் தான் கூறினேன். மருத்துவரிடம் அடையாளம் தெரியாத 7 பேர் என்னை தாக்கியதாக சொல்லி உள்ளேன் என்றால் இல்லை. அறுவடை செய்யும் இடத்தில் மிஷின்காரர் தாக்கியதாகவும், 4 பேர் அடித்ததாகவும் சொல்லி உள்ளேன். போலிஸ் விசாரரணையிலும் 4 பேர் அடித்ததகாதான் சொல்லி உள்ளேன். நான் புகார் வாக்குமூலத்தை படித்து பார்த்தேனா என்றால் அப்போது படிக்குடிம் நிலையயில் இல்லை. அவர்கள் படித்து காண்பித்தார்கள். வாக்குமூலத்திலும் 4 பேர் அடித்ததாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். போலிசார் அவ்வாறு எழுதினார்களா என்று தெரிந்துக் கொண்டேனா என்றால் படித்து சொன்னார்கள். 7 பேர் தாக்கியதாக போலிசார் எழுதி இருந்தால் அது தவறு என்றால் சரிதான். புகாரில்உள்ள விபரங்கள் எதுவும் எனக்கு தெரியாது என்றாலும் போலிசாரே புகாரை எழுதிக் கொண்டார்கள் என்றாலும் சரியல்ல. நீதிமன்றத்தில் முதல் விசாரணையில் சொன்ன விபரங்களை நான் போலிஸ் விசாரணையில் சொல்ல வில்லை என்றால் சரியல்ல. நான் சொல்லும் இடம் வீடுகள் இல்லாத வயல் பகுதி என்றால் சரிதான். சம்பவ இடத்தில் வெளி நபர்கள் யாரும் இல்லை. நிலத்தில் அறுவடை அறுப்பதற்காக சின்னகுஞ்சி என்ற ஒருத்தர் இருந்தார். சம்பவத்தின் போது அவர் உறவினர் அல்ல. தற்போது உறவினர். சம்பவத்தின்போது அவர் இருந்தார் என்ற விபரத்தி நான் போலிசில் சொல்லவில்லை என்றால் போலிஸ் கேட்காததால் சொல்லவில்லை. போலிசாரிடம் 4 பேர் வண்டியில் ஏற்றி போனதாக சொல்லி உள்ளேன் என்றாலும், என்ன வண்டி

என்பதை சொன்னேனா என்றால் அவர்கள் கேட்காததால் சொல்லவில்லை. என் முதல் விசாரணையில் நான் தப்பித்து எலி என்பவர் வீட்ற்கு சென்றுவிட்டதாக சொல்லிஉள்ளேன் என்றால் சரிதான். அவர் முழு பெயர் செல்வராஜ். அப்போது அவர் வீட்டில் இல்லை. அவர் மனைவி இருந்தார். அந்த விபரத்தை போலிஸ் விசாரணையில் சொல்லி உள்ளேன். நான் அவ்வாறு சொல்லி இருந்தால் செல்வராாஜ் மனைவியையும் சாட்சியாக சேர்த்திருப்பார்கள் என்றாலும் நான் வீட்டிற்கு ஓடி ஒளிந்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதலில் காவல் நிலையம் தான் சென்றேன். அதற்கு முதலில் வைத்தியம் பார்த்துவிட்டு கேஸ் கொடுக்குமாறு சொன்னார்கள். போலிஸ் சொல்லி தான் மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரிதான். மருத்துவமனையில் சேர்ந்தால் தான் புகாரை ஏற்க முடியும் என்று போலிஸ் சொன்னதால் தான் நான் மருத்துவமனைக்கு சென்றேன்என்றால் சரியல்ல. என் வயலில் அறுவடை செய்ததற்கான கூலியை இதுநாள் வரை கொடுக்கவில்லை. சம்பவத்திற்கு மறுநாள் போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். மிஷின் ஓட்டுனர் ஆந்திராக்காரர் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் அவர்தான்இருந்தார். அந்த விபரத்தை போலிசாரிடம் கூறினேன். அவ்வாறு நான் கூறியிருந்தால் அந்த நபரையும் வழக்கில் சாட்சியாக சேர்த்திருப்பார்கள் என்றால் அவரையும் சேர்த்துள்ளார்கள். அவர் பெயர் தெரியாது. ஆந்திராக்காரர் என்பதை போலிசிடம் நான் சொன்னதால் அவரை சாட்சியாக சேர்த்திருப்பார்கள் என்று கூறுகிறேன். நான் சொல்வது போல் அவரை சாட்சியாக சேர்க்கவில்லைஎன்றால் சரியல்ல. 18 ம் தேதி விசாரணை செய்த பின்னர் மீண்டும்போலிசார் என்னை விசாரிக்கவில்லை. எனக்கு ஏற்பட்ட காயங்கள் இருசக்கர வாகனத்தில் சென்று வீண் தகராறு செய்ததால் எனக்கு ஏற்பட்டது என்றால் சரியல்ல. அதனால் தான் வாகனம் குறித்த தகவல்களை நான் போலிசில் சொல்ல வில்லை என்றால் சரியல்ல. அ.சா 2 எனது உறவினர் என்றால் சரிதான். என் மீதும் புகார் கொடுத்து வழக்கு பதிந்து வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். பெத்தபெருமாள் என்பவர் எங்கள் ஊர் முக்கியஸ்தர். யுவன்ராஜ், பிரவீன், என் உறவினர் அல்ல. ஸ்வபன் குமார் என் உறவினரா என்றால் இல்லை. அவர்தான் ஓட்டுனர். ஓட்டுனரை தவிர்த்து மற்ற சாட்சிகள் எனக்கு வேண்டப்பட்ட நபர்கள் என்றால் சரியல்ல. மிஷின் ஓட்டுனருக்கு சரியாக தமிழ் தெரியாது என்றால் சரிதான். தகராறு செய்ததால் எனக்கு ஏற்பட்ட காயத்தை கொண்டு பொய்

புகார்அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது சொந்த ஊர் காரைக்கால் மாவட்டம் நல்லாத்துார். அ.சா 2 என் சகோதரர். அவர் பெயரிலும் வழக்கு உள்ளது என்றால் சரிதான். எதிரிகள் யாரும் என்னை தாக்கவில்லை. தகாத வார்த்தைகள் பேசவில்லைஎ ன்றாலும் போலிசார் மிகைபடுத்தி போட்ட வழககிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல. எதிரிகள் எந்தெந்த வாகனத்தில் வந்தார்கள் என்று புகாரில் சொல்லி உள்ளேன் என்றால் இருசக்கர வாகத்தில் வந்ததாக சொல்லிஉள்ளேன். என்னை அடித்து துாக்கி சென்றது ஒரு வாகனம், மற்ற வாகனம் குறித்து தெரியாது. அப்படி ஒரு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

# சார்பு நீதிமன்றம், சீர்காழி.

SC.56/2023

பெயர் - ஜான்பீட்டர் தேவராயன் (PW2- Recall )

த/பெ. /க.பெ.

தேதி - 03.09.2024

A1, A3 to A7 present.

**<u>சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலிசார் வழக்கு குறித்து என்னை காவல் நிலையம் வரவழைத்து விசாரணை செய்தார்களா என்றால் விசாரித்தார்கள். என்னுடன் பெத்தபெருமாள், யுவான் வந்தார்கள். அவர் எனது உறவினர். என்னையும் என்னுடன் வந்தவர்களையும் விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். நான் சொன்ன விபரங்களை போலிசார் காவல் நியைத்தில் வைத்து எழுதிக் கொண்டார்கள். தட்டச்சு செய்தார்களா என்பதை பார்க்கவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் பகுதி வயல்வெளி என்றால் சரிதான். மக்கள் நடமாட்டம் இல்லாத பகுதி என்றால் வயலுக்கு வருபவர்கள் மட்டும் வருவார்கள். சம்பவ தேதியில் வெளிநபர்கள் யாராவது வந்தார்களா என்றால் அவ்வாறு வந்ததாக நான் பார்க்கவில்லை. எதிரிகள் 4 இருசக்கர வாகனங்களில் வந்தார்கள். அ.சா 1யையும் அழைத்துக் கொண்டு காவல் நிலையம் சென்றோம். அன்றே புகார் கொடுத்தோம். போலிசார் புகாரை வாங்கிக் கொண்டு மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டார்கள். புகாரில் நான் கையொப்பம் செய்தேன். புகாரை ஆய்வாளர் எழுதினார். நான் சொல்லியதை அவர்கள் எழுதினார்கள். போலிசாரிடம் 7 பேர் வந்தாக சொல்லி உள்ளேன். நான் புகார் கொடுக்கவில்லை என்னிடம் கையெழுத்து வாங்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திலேயே இல்லை என்றாலும், சம்பவம் குறித்து எனக்கு தெரியாது என்றாலும் எங்கள் ஊர் முக்கியஸ்தர் பெத்தபெருமாள் கூறியதன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு என்னை அடித்திருந்தால் நான் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றிருப்பேன் என்றால் சரியல்ல. என் அண்ணன் கொடுத்த பொய் புகாருக்கு ஆதராக சாட்சியம் அளிக்கிறேன்என்றால் சரியல்ல.

# சார்பு நீதிமன்றம், சீர்காழி.

SC.56/2023

பெயர் - சின்னகுஞ்சி (PW3- Recall)

த/பெ. /க.பெ.

தேதி - 03.09.2024

A1, A3 to A7 present.

**<u>சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எனக்கு எழுதபடிக்க தெரியாது. போலிசார் வழக்கு தொடர்பாக என்னை வீட்டில் வைத்து விசாரணை செய்தார்கள். என்னை விசாரணை செய்து கைப்பட எழுதிக் கொண்டார்கள் என்றால் சரிதான். என்னிடம் கையெழுத்து வாங்கவில்லை. 7 பேர் 4 இருசக்கர வாகனத்தில் வந்தார்கள். அந்த விபரத்தை போலிஸ் விசாரணையில் சொல்லி உள்ளேன். மிஷின் ஓட்டுனருக்கும், ஜான்சனுக்கும் தகராறு என்று சொல்லி உள்ளேனா என்றால் இல்லை. நான் அ.சா 1ன் வயலில் 6, 7 ஆண்டுகளாக வேலை பார்க்கிறேன். வயல் பகுதியில் பொதுமக்கள் நடமாட்டம் இருக்காது என்றால் சரியதான். நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லைஎன்றாலும் அ.சா. 1டம் வேலை பார்ப்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

# சார்பு நீதிமன்றம், சீர்காழி.

SC.56/2023

பெயர் - யுவன்ராஜ் (PW5- Recall )

த/பெ. /க.பெ.

தேதி - 03.09.2024

A1, A3 to A7 present.

**<u>சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எனக்கு என் நண்பர் போன் செய்து தகவல் சொன்னார் என்றால் சரிதான். அ.சா 1 டம் காவல் நிலையம் சென்றோம். அ.சா. 2 வரவில்லை. அ.ச 1 யை மருத்துவமனைக்கு அழைத்து செல்லுமாறும் அதன் பின்னர் புகார் கொடுக்கலாம் என்று சொன்னார்கள். போன் செய்தவுடன் நல்லடம் வந்தேன். பெத்தபெருமாள் எனக்கு முன்னரே வந்து விட்டார். சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அ.சா. 1 , 2 எனது உறவினர்கள். அவர்கள் என் உறவினர் என்பதால் அவர்களுக்கு ஆதராக சாட்சியம் அளிக்கிறேன்என்றால் சரியல்ல.

# சார்பு நீதிமன்றம், சீர்காழி.

SC.56/2023

பெயர் - அகஸ்டின்மேரி (PW6- Recall )

த/பெ. /க.பெ.

தேதி - 03.09.2024

A1, A3 to A7 present.

**சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை- இல்லை .**